**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 67/2023 |
| வழக்கு சாட்சி | : | PW1 |
| நாள் | : | 11.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருஞானசம்பந்தன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ஆசை தம்பி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகத்தில் முதுநிலை மருந்துகள் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். நான் தமிழக அரசின் சுகாதரம் மற்றும் குடும்ப நல துறை அரசிதழ் எண்.200 நாள் 12.07.2013 அன்று பிரகடனம் செய்யப்பட்ட மருந்துகள் ஆய்வாளர் ஆவேன். நான் உதவி மருந்து கட்டுபாட்டு இயக்குநர் அலுவலகம், மண்டலம் 4–ல் வளசரவாக்கம் சரக மருந்துகள் ஆய்வாளராக பணியிட மாறுதல் காரணமாக சேர்ந்த போது 22.04.2016 அன்று இவ்வழக்கு தொடர்பான கோப்புகள் திரு.எம்.அப்துல்மாலிக் என்பவரிடமிருந்து மேல்நடவடிக்காக கிடைக்கபெற்றது. இதில் எதிரியின் மீது மருந்துகள் மற்றும் அழகு சாதன சட்டம் 1940 பிரிவு 18(c)–ன் கீழ் மருந்துகள் உரிமம் இல்லாமல் விற்பனை செய்ததால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதில் மருந்துகள் மற்றும் ரசீதுகள் கைப்பற்றப்பட்டிருந்தது. 69 எண்ணிக்கையுடைய விற்பனை ரசீதுகள் **அ.த.சா.ஆ.11** ஆகும். இந்த அழகு மெடிக்கல்சிற்கு மருந்துகளை விநியோகம் செய்திருந்த மொத்த வியாபார நிறுவனமான முத்து பார்மசி போரூர் மற்றும் ராவ் & கோ, ஆலபாக்கம், விசாரணை செய்ததில் அவர்கள் Mount பூந்தமல்லி ரோட்டில் உள்ள முகவரிக்கு தான் மருந்துகளை கொடுத்தாகவும், மேற்கூரிய எதிரியின் முகவரிக்கு கொடுக்கவில்லை எனவும், தன்னிச்சை

விளக்க கடிதம் சமர்பித்தனர். இந்த விளக்க கடிதத்துடன் 13 ரசீதுகளையும் சமர்பித்தனர். இந்த விளக்க கடிதம் மற்றும் 13 ரசீதுகள் **அ.த.சா.ஆ.12** ஆகும். எதிரிக்கு மேற்கூரிய விதி மீறலுக்கு ஏன் நடவடிக்கை எடுக்ககூடாது என விளக்கம் கேட்டு காரணமாக கோரும் கடிதத்தை 13.01.2017 அன்று அனுப்பிவைத்தேன். அந்த கடிதம் **அ.த.சா.ஆ.13** ஆகும். அந்த விளக்கம் கேட்ட கடிதம் திரும்ப பெற்றப்படியால் மறுமுறை எதிரிக்கு அனுப்பிவைத்தேன். அந்த திரும்ப வந்த கடிதம் **அ.த.சா.ஆ.14** ஆகும். மறுமுறை 12.04.2017 அன்று விளக்கம் கோரும் கடிதம் அனுப்பினேன். அந்த கடிதம் **அ.த.சா.ஆ.15** ஆகும். இதற்கு எதிரி அலுவலகம் வந்து 17.04.2017 அன்று பதில் கடிதம் சமர்பித்தார். அந்த பதில் கடிதம் **அ.த.சா.ஆ.16** ஆகும். இதில் தனக்கு வேறு இடத்தில் வைத்து வியாபாரம் செய்வதற்கு உரிமம் தேவை என்று தெரியாது மேலும், எஸ்.குருநாதன் என்பவர் கடையில் வேலை பார்த்த நபர் மட்டுமே என்றும், அவருக்கு எந்த பொறுப்பும் இல்லை என தெரிவித்திருந்தார். எதிரி அளித்த பதில் திருப்திகரமாக இல்லாததால் எதிரியின் மீது வழக்கு தொடர்வதற்கு மருந்து கட்டுப்பாட்டு இயக்குநருக்கு 14.06.2017 மற்றும் 12.10.2017 அன்று முன்மொழிவு கடிதத்தை அனுப்பிவைத்தேன். அந்த முன்மொழிவு கடிதம் **அ.த.சா.ஆ.17** ஆகும். இதற்கு 20.10.2017 அன்று இசைவாணை கிடைக்கப்பெற்றது. அந்த இசைவாணை **அ.த.சா.ஆ.18** ஆகும். எனவே எதிரியின் மீது 04.01.2020 அன்று தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் தனிபுகாரினை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த மருந்து வியாபார நிறுவனத்தை நீங்கள் ஆய்வு செய்தீர்களா என்றால் இல்லை எனக்கு முன்பு இருந்த மருந்துகள் ஆய்வாளர் திரு.எம்.அப்துல்மாலிக் என்பவர் ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்திருந்தார். எதிரிக்கு எந்த வித மருந்து உரிமமும் இல்லை என்றால் அவருக்கு வேறு இடத்திற்கு தான் உரிமம் வழங்கப்பட்டிருந்து. ஆனால் எதிரி இந்த உரிமத்தை பயன்படுத்தி வேறு இடத்தில் கொள்முதல் மற்றும் விற்பனை செய்துள்ளார்.

மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 மற்றும் அதன் உடன் இணைந்த விதிகள் 1945–ன் கீழ் வியாபாரம் செய்யும் ஒவ்வொரு இடத்திற்கும் தனித்தனியாக மருந்து உரிமம் பெறவேண்டும். இந்த வழக்கு தொடர்பாக உங்களுடைய பங்கு என்னவென்றால் நான் எதிரிக்கு மருந்து உரிமம் இல்லாமல் வியாபாரம் செய்ததற்கு ஏன் வழக்கு தொடரக்கூடாது என விளக்கம் கேட்டு காரணம் கோரும் கடிதத்தை அனுப்பினேன். பதில் கிடைக்கபெற்று மருந்து கட்டுப்பாட்டு இயக்குநருக்கு முன்மொழி கடிதத்தை அனுப்பி அனுமதி ஆணை கிடைக்கபெற்று நீதிமன்றத்தில் புகாரினை தாக்கல் செய்தேன். இந்த வழக்கில் பொது சுகாதார சீர்கேடு சம்பந்தமாக எந்த வித குற்றமும் இல்லை. எதிரி நான் கோரிய விளகத்திற்கு பதில் சமர்ப்பித்தார் என்றும், வேண்டுமென்றே அதை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 13.01.2017 மற்றும் 12.04.2017 தேதியிட்ட காரணம் கோரும் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு எதிரி 17.04.2017 தேதியிட்ட பதிலை கொடுத்துள்ளார். எதிரி மீது இது தான் முதல் வழக்கு என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் வேண்டுமென்றே இந்த புகார் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2026.03.11 15:00:19 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.